## கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்காக இணைப்பு மொழிப் (ஆங்கில) பரீட்சை - 2024

## Link Language (English) Test For Sri Lanka Teacher Educators' Service - 2024

இலக்கம் 1925/ 37 மற்றும் 2015, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கமைய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான இணைப்பு மொழிப் (ஆங்கிலம்) பரீட்சை 2025 சனவரி மாதத்தில் கொழும்பில் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

விண்ணப்பப் படிவத்தை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்தில் “Our Services” இன் கீழுள்ள “Online Applications-Recruitment Exams/ E. B. Exams” இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதுடன் விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலை (Onliene) மூலமாக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட முடியும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பணிகள் 2024, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கும் என்பதுடன், 2024, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதியன்று பி. ப. 9.00 மணிக்கு நிறைவடையும். விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அதன் அச்சுப் பிரதியின் உரிய பகுதிகளை கையெழுத்தக்களால் பூரணப்படுத்தி விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு, உரிய நிறுவனத் தலைவரின் சான்றுப்படத்தலுடன் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படம் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு கிடைக்கும் வகையில் பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

02. இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் சகல உத்தியோகத்தர்களும் ஆட்சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் இணைப்பு மொழியான ஆங்கிலம மொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். 1925/ 37 மற்றும் 2015.09.28 ஆந் திகதியுடைய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 9.1 அட்டவணையின் இலக்கம் 3 இன் கீழ்க் தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 08/ 2020 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் இந்த இணைப்பு (ஆங்கிலம்) மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தேவையிலிருந்து விடுவிக்கப்படுவர். ஏனைய உத்தியோகத்தர்கள் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

03. இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய விதிமுறைகள் இலக்கம் 1925/ 37 மற்றும் 2015, யூலை மாதம் 28 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களது வசதி கருதி குறித்த பாடத்திட்டம் மற்றும் ஏனைய விதிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

04. பரீட்சை விதிமுறைகள்.- எழுத்துமூலப் பரீட்சை

| பாட இலக்கம் | பாடம் | புள்ளிகள் | காலம் (மணி) |
|---|---|---|---|
| 01 | ஆங்கில மொழி | 100 | 02 |

05. பாடத்திட்டம் :

5.1 **English Grammar**

A suitable level of proficiency on the following form of grammar in the spoken and the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple / Compound/Complex/Compound/ Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Deteminers
- Prepositions

5.2 **Writing Skills**

The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study.

- Essay Writing
- Summary Writing skills
- Report writing skills
- Letter writing skills

5.3 **Reading Skills**

Candidate's ability to comprehend a printed text, infer meaning and writting interpretation is expected.

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (written)

06. பாடத்தில் சித்தியடைவதற்காக விண்ணப்பதாரர் ஒருவர் ஆகக் குறைந்தது 40% சதவீதம் அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

07. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களதும் பெறுபேறுகள் உள்ளடங்கிய பெறுபேறுகள் பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படும். பரீட்சை விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அனுப்பிவைக்கப்படமாட்டாது.

08. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் நிகழ்நிலை மூலமாக விண்ணப்பித்த மென்பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலமாக அனுப்பிய அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற பின்னர் குறித்த மென்பிரதி மற்றும் அச்சுப் பிரதி என்பன சரிபார்க்கப்படும் (Verify) என்பதுடன், செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என்பதாகவும் பரீட்சைத் திணைக்களத்தினால் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதாக நிகழ்நிலை முறைமையினுள் பிரவேசிபபதற்காக பயன்படுத்தி தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறியத்தரப்படும் நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முன்னர் பரீட்சை விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் படிவத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது அதன் அறிவுறுத்தல்களை சரியாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்று கொண்ட பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்தப் பரீட்சைக்கு விசேட தேவைகளுடன் கூடிய விண்ணப்பதாரர்கள் தோற்றுவார்களாயின் அது தொடர்பில் விண்ணப்பப்படிவத்தில் கட்டாயமாக குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், உரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும் என்பதுடன் அதனை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கு விண்ணப்பதாரர்கள் கடமைப்பட்டுள்ளனர். பரீட்சைக்குரிய விதிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

10. போலியான தகவல்களை வழங்குதல்.- விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகுந்த கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இந்த பரீட்சையின் சட்ட விதிமுறைகளுக்கமைய எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் என வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சையின் பின்னர் என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம்.

11. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதி 2024, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்னும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பீடாதிபதி/வலயக் கல்விப் பணிப்பாளரூடாக மாத்திரம் வேண்டும். பரீட்சையின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். இத்திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முன் தீர்மானத்தின் அடிப்படையில் விண்ணப்ப இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய கட்டணங்களை செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுகளுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை அனுமதிஅட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்ட உடன் விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவல் மூலமும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரிசுரிக்கப்படும் அறிவித்தல் மூலமாகவும்

அறியத்தரப்படும். குறித்த அறிவித்தல் பிரசுரமாகி 02 அல்லது 03 நாட்களுக்கும் தமக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை எனின் அச் செய்திப்பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத்தர வேண்டும். அவ்வாறு அறியத்தரும்போது விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பனவற்றைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியே உள்ள விண்ணப்பதாரர் ஒருவர் எனின் குறித்த விபரங்களுடன் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றை அனுப்பிவைக்கக்கூடிய தொலைநகல் இலக்கம் ஒன்றையும் உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதம் ஒன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலை நகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்து விசாரிப்பது பயனுள்ளதாக இருக்கும். பரீட்சைத் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவைப்படின் விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதற்குரிய படிவத்தை தபால் மூலம் அனுப்பி வைக்கும் போது பதிவத் தபால் செய்த பற்றுச் சீட்டையும் தயார் நிலையில் வைத்துக் கொள்வது பிரயோசனம் மிக்கதாக இருக்கும். விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டையை வழங்குவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படலாகாது.

**குறிப்பு**.- மேலே 12 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பதாரர்களால் பின்னராக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

13. விண்ணப்பபடிவத்திலும் பரீட்சைக்கான அனுமதீ அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்பட்டிருத்தல் வேண்டும். தமது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

14. விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களும் முதலாம் நாளில் தமது கையொப்பத்தை சான்றுப்பத்திய அனுமதி அட்டையினை மண்டப பிரதானியிடம் கையளித்தல் வேண்டும். முறையாக தமது அனுமதி அட்டையினை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

15. பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆதாரங்களைச் முன்னிலைப்படுத்துவது விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும். அதற்காக,

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு அல்லது;
(iii) செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அவ்வாறே பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக இரண்டு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டப்பத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த சந்தர்ப்பம் முதல் பரீட்சை நிறைவடைந்து வெளியேறும் சந்தர்ப்பம் வரையில் பரீட்சை உத்தியோகத்தர்கள் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகள் திறந்திருத்தல் வேண்டும்.

16. **பரீட்சைக் கட்டணம்** :

(அ) இப் பரீட்சைக்கு அறவிடப்படும் கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்கான கட்டணமாக மாற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.
(ஆ) முதல் தடவை கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
(இ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்கும் ரூபா 250.00 வீதம் கட்டணம் அறவிடப்படும்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையூடாக வழங்கப்படும் கீழ்வரும் கட்டணம் செலுத்தும் செயன்முறைகளூடாக மாத்திரமே கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

i. ஏதேனுமொரு வங்கிக் கடன் அட்டைகளூடாக (Any Bank Credit Card)
ii. இணைக் கொடுப்பனவு வசதியுடன் கூடிய ஏதேனுமொர வங்கி இருப்பு அட்டை (Any Bank Dabit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி முறைமை (Online Banking Method of Bank of Ceylon)
iv. ஏதேனும் ஒரு இலங்கை வங்கிக் கிளையினூடாக (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு**.-

(அ) மேற்படி முறைகளூடாக கட்டணம் செலுத்தும் விதம் தொடர்பில் ஆலோசனைகள் இணையத்தளத்தின் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் செய்தியொன்றினூடாக அறியத்தரப்படும். கட்டணத்திற்கு மொத்தத் தொகையும் முழுமையாக செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் பரீட்சைக் கட்டணத்தைக் குறைத்தோ அல்லது கூட்டியோ செலுத்தியிருப்பின் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தும் முறைகளூடாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்காக மாற்றுவதற்கோ முடியாது.

17. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்குப் பரீட்சை விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும். அச்சட்ட விதிமுறைகளை மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவர்கள் உட்பட வேண்டும்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி உரைகளுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மைகள் அல்லது வேறுபாடுகள் காணப்படின் அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கையெடுக்கப்படும்.

19. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் தீர்மானமெடுக்கும் உரிமை கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளரைச் சாரும்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர,
செயலாளர்,
கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய", பெலவத்த,
2024, நவெம்பர் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்காக இணைப்பு மொழிப் (ஆங்கிலம்) பரீட்சை - 2024**

**Link Language (English) Test For Sri Lanka Teacher Educators Service - 2024**

1. (i) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :..........................................................................................
(உ+ம் HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) இறுதியில் இருக்கும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் இருக்கும் வகையில் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :..........................................................................................
(உ+ம் : GUNAWARDHANA, H. M. S. K.)
(iii) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழில்) :..........................................................................................

2. (i) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் :..........................................................................................
(ii) கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர் கல்லூரி/ ஆசிரியர் நிலையம் :..........................................................................................
(iii) வலயக் கல்வி அலுவலகம் :..........................................................................................
(ஆசிரியர் கல்லூரி/ ஆசிரியர் நிலைய உத்தியோகத்தர் மாத்திரம்)

3. முகவரி :

(i) தனிப்பட்ட :..........................................................................................

(ii) உத்தியோகபூர்வ :..........................................................................................

(iii) அனுமதிப்பத்திரத்தை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.....................................
..........................................................................................

(iv) கடமைத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4. (i) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(iii) பால் :

ஆண் - 0 ☐

பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

5. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் விபரங்கள் :

பற்றுச்சீட்டு இலக்கம் :..........................................................................................

தபால் அலுவலகம் :..........................................................................................

திகதி :..........................................................................................

| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். |
|---|

6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்பதை உறுதி செய்கின்றேன். அத்துடன் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

..............................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. பரீட்சை ஆணையாளர் நாயகம்,

மேலே விபரங்கள் தரப்பட்டுள்ள விண்ணப்பதாரர் இக் கல்வியியல் கல்லூரியில்/ ஆசிரியர் கல்லூரியில்/ ஆசிரியர் நிலையத்தின் உத்தியோகத்தர் ஒருவராவார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதன் பற்றுச் சீட்டினைச் சரியாக ஒட்டியுள்ளார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

..............................................

பீடாதிபதி/ ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்/
ஆசிரியர் நிலைய முகாமையாளர்கள்/
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.

முகவரி :.................................

திகதி :.................................

(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்.)

(பொருத்தமற்ற வசனங்களை வெட்டி விடவும்.)

11-295